

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற அமைதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், மாவட்ட துணை செயலாளர் ராஜ் மோகன் செல்வின், மாநில பொறியாளர் அணி அன்பழகன், பாலகுருசாமி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கையில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் முலம் பயனாளிகளுக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் நலத் திட்ட உதவிகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி,எஸ்.மாங்குடிஎம்.எல்.ஏ.சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம். துரை.ஆனந்த், திருப்புவனம் பேரு ராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி செல்வசுரபி ஆகியோர் உள்ளனர்.

### இராமநாதபுரம் மாவட்ட சட்டமன்றத் தொகுதி வாரியாக

# கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் அறிக்கை!



இராமநாதபுரம், பிப்.5-

இராமநாதபுரம் மாவட்டம், சட்டமன்ற தொகுதி வாரியாக ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் என

மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் இளந்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, மண்டல பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்று சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் அறிவுரையின் படி, இராமநாதபுரம் மாவட்டம் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

சட்டமன்ற தொகுதி இராமநாதபுரம், திருவாடனை இன்று (05.02.2026) காலை 11.00 மணி இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மஹால் பரமக்குடி, 05.02.2026 ஏ.பி.ஷா மஹால், முதுகுளத்தூர் பிற்பகல் 02.00 மணி கிளை ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக, வார்டு, கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

### கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் தலைமை! விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.

# விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட அளவிலான கிரிக்கெட் - கபடிப் போட்டிகள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

விருதுநகர், பிப்.5-

அருப்புக்கோட்டையில் விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ஆர்.ரமேஷ் தலைமையில் மாவட்ட அளவிலான கிரிக்கெட் மற்றும் கபாடி போட்டிகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமசந்திரன் தொடங்கி வைத்தார். அருப்புகோட்டை எஸ்.பி.கே. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் திராவிட பொங்கல் விழா சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் என்ற தலைப்பில் விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட அளவில் கபாடி மற்றும் கிரிக்கெட் போட்டிகள் நடந்தது.





குமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்.லார்சன் பின்டோ அவர்களது புதல்வர். புதுநன்மை பெறும் விழாவில், தமிழ்நாடு மாநில உணவு ஆணையம் தலைவர் முன்னாள் அமைச்சர். என். சுரேஷ் ராஜன், ராதாபுரம் சடடமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர்.வழக்கறிஞர்.சிவராஜ்,செ ன்னை வடக்கு மாவட்டம், மாநில தலைமை பொதுக்குழு உறுப்பினர்.இராயபுரம் சு. சேகர், கேரள மாநில தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர். ஆர். எல்.பிரின்ஸ் ஆகியோர் பங்கேற்று வாழ்த்தினர்.

துணை அமைப்பாளர்கள் தட்சணாமூர்த்தி, வினோத்குமார், செல்வமணி, முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை அமைப்பாளர் இளங்கோ வரவேற்றார்.

போட்டிகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் துவக்கி வைத்தார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது தி.மு.க. தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். ரமேஷ் வெற்றி பெற்ற அணிகளுக்கும் சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கும் பரிசு வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தங்க பாண்டியன் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் ராஜா அருண் மொழி, முன்னாள் ஒன்றிய சேர்மன் சுப்பாராஜ், தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல்கமீது, முன்னாள் நகர்மன்ற தலைவர் சிவப்பிரகாசம், அருப்புகோட்டை ஒன்றிய செயலாளர்கள் பாலகணேசன், பொன்ராஜ், சாத்துார் மேற்கு ஒன்றிய செயலாளர் கடற்கரை ராஜ், சாத்துார் நகர செயலாளர் குருசாமி, விருதுநகர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கனிமுருகன், தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி நகர மற்றும் ஒன்றிய அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் நகர தி.மு.க. செயலாளர் ஏ.கே.மணி நன்றி கூறினார்.



நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.இதில் போர்வெல் கணேசன்,ஜோசப் பெல்சி, செல்வ கருணாநிதி, சுடலைக்கண்ணு, மணிசூரியன், ஜார்ஜ் கோசல், அல்போன்ஸ், ஹரிகிருஷ்ணன், ஆதிபாண்டி, அனுராதா, சந்திரகலா, சேது ராமலிங்கம், ஜான் கென்னடி,கசமுத்து சாந்திசுபாஷ், ஜான் ரபீந்தர், எஸ்.என்.முருகன் பொட்டை குளம் முருகன், கமலா நேரு, முரளி, வள்ளியூர் யூனியன் முன்னாள் துணை சேர்மன் ஆதிபரமேஸ்வரன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ஆச்சியூர் ராமசாமி, காதர் மைதீன், வீரபாண்டி, லயன் சுரேஷ், கே.சி.ராஜா, வள்ளி,சுயம்பு ராஜன், டிசைன் விலை சதீஷ்குமார் (ஏ) ஆசிக் முகமது, சங்கர், ராதாகிருஷ்ணன், நயினார், முத்துராஜ், ஐயப்பன், செங்குட்டுவன், மாவட்ட கவுன்சிலர் ஜான்ஸ் ரூபா, கவுன்சிலர்கள் நடேஷ் அரவிந்த் நடராஜன்,முருகன், இசக்கிபாபு, ஜான்சிராஜன், சிவராமகிருஷ்ணன், ராஜேஸ்வரி, வேணி, கோட்டைக்காரங்களும் சொக்கலிங்கம், சந்தியாகு இளங்கோ,மகாராஜன், சின்னத்துரை, சோமசுந்தரம், பிச்சுமணி, முத்துசாமி, ஜமால், மைதீன், அருணாச்சலம்,ஜூலியஸ் ராக்சமுத்து, ஏர்வாடி ஆஷிக் , கண்மணி,இசக்கிகுமார் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் ரவுண்டானா அருகில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் ஊர்வலமாக வந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். உடன் மாவட்ட அவை தலைவர் மனோகரன், மாவட்ட துணை செயலாளர் வேப்பம்பட்டி செந்தில், மாவட்ட மாநில பொதுக்குழு உறுப்பினர் தக்காளிஹக்கீம், நகரச் செயலாளர் முத்துக்குமார், நகர மன்ற தலைவர் அய்யம்மாள், சின்னமனூர் ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, இளைஞர் அணி முத்துக்குமரன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூரில் 'தமிழ்நாடுதலைகுனியாது' பரப்புரை கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் - பொன். முத்துராமலிங்கம் சிறப்புரை!

சிவகங்கை, பிப்.5-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முதல்வர் தளபதி உத்தரவின் பேரில் பிப்ரவரி 1ஆம் தேதி முதல் 234 சட்டமன்றத் தொகுதிகளில்தமிழ் நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் நடைபெற்று வருகின்றது . அதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்டத்தில் இன்று (பிப்ரவரி 5ஆம் தேதி - வியாழக்கிழமை) மாலை 5 மணிஅளவில் திருப்பத்தூர் அண்ணா அரங்கத்தில் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இந்த பொதுக்கூட்டத்தில் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

(6ம்தேதி - வெள்ளிக்கிழமை) மாலை 5.00மணி அளவில் சிவகங்கை சண்முகராஜா கலையரங்கில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பொன். முத்து ராமலிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இதே போல் வருகிற 10ம் தேதி மானாமதுரையில் செவ்வாய்க்கிழமை மாலை 5.00மணிஅளவில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில்மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்டக் கழக நிர்வாகிகள் பேசுகிறார்கள். பரப்புரை பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை அந்தப்பகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், காடல்குடி அரசு உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கினார். நிகழ்வில் பள்ளியின் தலைமை ஆசிரியை நாடாளுமன்ற செல்வி, புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், பாக முகவர் சுரேஷ் பாக இளைஞரணி அமைப்பாளர் செல்வராஜ் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# தேனி வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

## தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

தேனி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ப. செல்லத்துரை அவர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **ஆ. ஜெயக்குமார்** (முத்தாலம்மன் கோவில் தெரு, புள்ளக்காபட்டி, தேவதானப்பட்டி, பெரியகுளம், தேனி - 625602) அவர்கள் தேனி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-02-2026.

**தயாநிதி மாறன் எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திருமதி பொற்செல்வி இளமுருகு
## பிப்ரவரி 5 (2013)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவரும் – தலைவர் கலைஞர் அவர்களிடம் நீண்டகாலமாக அன்பும் பாசமும் காட்டி, தலைவரின் குடும்பத்தாரோடு இரண்டறக் கலந்துவிட்டவரும் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் இவர்.

தி.மு.க. மகளிர் அணி துவக்கப்பட்ட காலத்திலிருந்தே மகளிர் அணியில் இடம் பெற்றதோடு, மாநில மகளிர் அணி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். 1987ஆம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் "கலைஞர் விருதினை" அளித்து சிறப்பு செய்தார்.

"1957இல் நான் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம், குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டபோது, திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்கள் தனது கணவரோடு அரும்பாடுபட்டு, கழகப் பணியாற்றி, என்னுடைய தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைத்தவர் என்பதை நான் என்றைக்கும் மறந்திட முடியாது" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**